# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,685—1966 මාර්තු 4 වැනි සිකුරාදා—1966.3.4

14,685 ம் இலக்கம்—1966 ம் ஆண்டு மாச்சு மாதம் 4 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV—உள்ளூர் ஆட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் |
|---|---|
| உள்ளூராட்சி அறிவிப்புகள் .. .. | 41 |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | — |
| துணை விதிகள் .. .. .. | 43 |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | — |
| வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. | — |
| வரவு செலவுத் திட்டங்கள் .. .. | — |
| ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| விதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| நானாவிதம் .. .. .. | 44 |


## உள்ளூராட்சி அறிவிப்புகள்

### கிராமச்சபைகள் கட்டளைச் சட்டம்

1961 இன் 60 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான (257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ம் பிரிவின்கீழ் யாழ்ப்பாண மாவட்டத்து காரைதீவு கிராமப்பிரதேசத்தின் கிராமச் சபையால் ஆக்கப்பட்டு உள்ளூராட்சி அமைச்சரால் அப்பிரிவின் (3) ம் உட்பிரிவின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

எ. ஈ. கொகர்லி மொறகொட,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

1966 ம் ஆ ஜனவரி மீ 29 ந உ.

### துணைவிதி

#### விரும்பத்தகாத அபாயகரமான தொழில்

1958 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ம் தேதிய 11,268 ம் இலக்கக் கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட விரும்பத்தகாத அபாயகரமான தொழில் சம்பந்தமான உபவிதிகள் அவற்றின் (1) ம் பந்தியில் (ஓ) என்னும் விஷயத்தை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்த்தல் மூலம் இதனால் மேலும் திருத்தப்படுகின்றன.

(ஓ) மீனுக்கு ஐஸ் போடுதல்.

3-7—4.3.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,685

### கிராமச் சங்கங்கள் கட்டளைச் சட்டம்

#### 13 ம் பிரிவின்படியான அறிவித்தல்

1961 இன் 60 ஆம் இலக்க கிராமச்சங்கங்கள் (திருத்தம்) அதிகாரச்சட்டத்தால் திருத்தப்பட்டபடியான கிராமச்சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 257) 13 (1) ஆம் பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களின் பலத்தைக்கொண்டு கிழக்குப் பிரதேசம் (கீழ்) உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பேர்ட்டன் ஆர்னோல்ட் ஜெயராசா காசிநாதர் ஆகிய நான் அம்பாரை மாவட்டத்து உடப்பலாத்தை கிராமச் சங்கத்தின் 2 ம் இலக்க வட்டார அங்கத்தவர் திரு. அம்பலகே காரமானிஸ் சிங்கோ அவருடைய தெரிவின்பின்னர் சங்கத்திற்கு அறிவிக்காமல் சங்கத்தின் அடுத்தடுத்த மூன்றுக்கு மேற்பட்ட கூட்டங்களுக்குச் செல்லவில்லை என்பதை நிச்சயமறிந்து அம்பாரை மாவட்டத்து உடப்பலாத்தை கிராமச்சங்கத்தின் 2 ம் இலக்க வட்டார அங்கத்தவர் திரு. அம்பலகே காரமானிஸ் சிங்கோ இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதியிலிருந்து உத்தியோகத்தை விட்டு நீங்கியுள்ளாரென்று இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

பெ. ஆ. ஜெ. காசிநாதர்,
உள்ளூராட்சி உதவி ஆணையாளர், கிழக்குப் பிரதேசம் (கீழ்).

1966 ம் ஆ பெப்புருவரி மீ 17 ந உ.

3-167—4.3.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,685

### முக்கிய அறிவித்தல்

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளின் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலை கவனிக்குமாறு வேண்டப்படுகிறது.

---

இத்தாற் சகலரின் கவனத்திற்கும் கொண்டு வருவது யாதெனில், உற்பத்திச் செலவு கூடியதன் காரணமாக **இலங்கை அரசாங்க வர்த்தமானியின்** விளம்பரக் கட்டணங்களைக் கூட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. தற்போது நடைமுறையிலிருக்கும் ஒற்றைப்பந்தி அங்குலக் கட்டணம் ரூபா 10 ம் மேலதிக ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் ரூபா 10 ம் என்பதற்குப் பதில் **ஒரே கட்டணமாக ஒற்றைப்பந்தி அங்குலத்திற்கோ அன்றி அதன் பகுதிக்கோ ரூபா 15,** வியாபாரச் சின்னங்கள் தவிர்ந்த ஏனைய விளம்பரங்களுக்கு 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ந் திகதி தொடக்கம் அறவிடப்படும்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1966 ம் ஆ பெப்புருவரி மீ 11 ந உ.

**பேர்னட் டி சில்வா,**
அரசாங்க அழுத்தகன்.

## இறைச்சிக்காரர் கட்டளைச் சட்டம்

(272 ம் அத்தியாயமான) இறைச்சிக்காரர் கட்டளைச் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் கீழ் தக்க அதிகாரத்தாபனத்தால், அதாவது யாழ்ப்பாணம் மாவட்டத்து புலோப்பளை கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால், ஆக்கப்பட்டு, உள்ளூராட்சி அமைச்சருக்கு, அப்பிரிவால் உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு, அவரால் உறுதிப்படுத்தப்பட்ட பிரமாணங்கள்.

எ. ஈ. கொகர்லி மொறகொட,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு, 1966 ம் ௵ ஜனவரி ௴ 29 ந உ.

### பிரமாணங்கள்

1. எவரேனும் எக்கொல்களத்திலாயினும் எம்மிருகத்தையும் :—

(அ) அம்மிருகம் வைத்திய சௌக்கிய உத்தியோகத்தரால் பரிசோதிக்கப்பட்டு, மனிதர் உண்பதற்காக கொல்லுதற்குத் தகுதியானதென அவரால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலன்றி,

அல்லது

(ஆ) இப்பிரமாணத்தின் (அ) பந்தியின் கீழ் அம்மிருகம் அங்கீகரிக்கப்பட்ட நேரத்திலிருந்து 24 மணித்தியாலங்கள் கழிந்த பின்னர் எச்சமயத்திலும்,

அல்லது

(இ) எத்தினத்திலேனும் காலை 9 மணிக்கும் நண்பகல் 12 மணிக்குமிடையேயன்றி கொல்லலாகாது.

ஆயின், தலைவர், அவர் புறநடையானதெனக் கருதும் சந்தர்ப்பங்களில் இதில் சொல்லப்படுவதல்லாத வேறு எச்சமயத்திலேனும் எம்மிருகத்தையும் கொல்ல அதிகாரம் அளிக்கலாம்.

2. 1 ம் பிரமாணத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் கொல்களவளவிலிருந்து உயிருடன் அப்புறப்படுத்தப்பட்டுள்ள மிருகம் எதையும் அது மறுபடியும் அந்தப் பிரமாணத்தின் கீழ் பரிசோதிக்கப்பட்டு மனிதர் உண்பதற்காக கொல்லுதற்குத் தகுதியானதென அங்கீகரிக்கப்பட்டாலன்றிகொல்களம் எதிலும், எவரேனும் கொல்லலாகாது.

3. (1) எம்மிருகமும் 1 ம் பிரமாணத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் நோயுள்ளதாக அல்லது மனிதர் உண்பதற்காகக் கொல்லப்படுதற்குத் தகுதியற்றதாகக் காணப்படின் வைத்திய சௌக்கிய உத்தியோகத்தர் அதனைக் கொல்லுவதைத் தடுக்கலாம்.

(2) இப்பிரமாணத்தின் கீழ் கொல்லப்படுவது தடுக்கப்பட்ட எம்மிருகத்தையும் எவரும் கொல்லலாகாது.

4. ஒரு கொல்கள வளவுக்குள் எம்மிருகத்தையும் கொண்டுவரும் ஒவ்வொருவரும் அம்மிருகம் அவ்வளவில் தங்கியிருக்கும்போது அதற்குப் போதிய உணவும் தண்ணீரும் கிடைக்கச் செய்வதற்கு அவசியமான எல்லாக்காரியங்களையும் செய்தல் வேண்டும்.

5. ஒரு கொல்கள வளவுக்குள் எம்மிருகத்தையும் கொண்டுவரும் ஒவ்வொருவரும், அம்மிருகம் கொல்லப்படுதற்குத் தகுதியற்றதென நிராகரிக்கப்பட்டால் உடனே அம்மிருகத்தை அவ்வளவிலிருந்து அப்புறப்படுத்த அல்லது அப்புறப்படுத்துவிக்க வேண்டும்.

6. கொல்களம் எதிலும் கொல்லப்பட்ட எம்மிருகத்தினதும் சடலம் அல்லது கழிவு இறைச்சி நோயுள்ளதென அல்லது மனிதர் உண்பதற்குத் தகுதியற்றதென வைத்திய சௌக்கிய உத்தியோகத்தர் அபிப்பிராயப்படுவாராயின், அவர், உடனே அந்தச் சடலம் அல்லது கழிவு இறைச்சி விற்பதற்கு வைக்கப்படாமல் அல்லது மனிதர் உண்பதற்கு உபயோகிக்கப்படாமல் தடுத்தற்கேதுவாக அச்சடலத்தை அல்லது கழிவு இறைச்சியை அழிக்கவேனும் ஒழிக்கவேனும் செய்தல் வேண்டும். வைத்திய சௌக்கிய உத்தியோகத்தரின் ஏவலின் பேரிலன்றி எவரும் அத்தகைய சடலத்தை அல்லது கழிவு இறைச்சியை கொல்களத்திலிருந்து அப்புறப்படுத்தலாகாது.

7. கொல்களக் காப்பாளர், மனிதர் உண்பதற்காகக் கொல்லப்படுதற்குத் தகுதியானதென அங்கீகரிக்கப்பட்டிராத அல்லது 3 ஆம் பிரமாணத்தின் கீழ் கொல்லப்படுவது தடுக்கப்பட்டுள்ள எம்மிருகத்தையும் அங்கு கொல்லுவதற்கு அனுமதிக்கலாகாது.

8. மனிதர் உண்பதற்கான எம்மிருகத்தினதும் சடலத்தையும், அச்சடலத்தின் முன் தொடைகளிலும் பின்தொடைகளிலும் கொல்களக் காப்பாளரால் " V.C.T. " என்னும் எழுத்துக்களும் காரியத்துக்கேற்ப " நாட்டு மாட்டிறைச்சி ", " ஆட்டிறைச்சி " அல்லது " பன்றியிறைச்சி " என்னும் அடையாளங்களில் ஒன்றும் இடப்பட்டிருந்தாலன்றி கொல்களத்திலிருந்து எவரும் அப்புறப்படுத்தலாகாது.

9. எம்மிருகமும், வேறு எம்மிருகத்தினதும் முன்னிலையிலேனும் அவ்வளவில் முன்னர் கொல்லப்பட்ட ஒவ்வொரு மிருகத்தினதும் சடலம் அப்புறப்படுத்தப்பட்டு அல்லது மறைக்கப்பட்டு அவ்வளவு சுத்தம் செய்யப்படும் வரையிலேனும் கொல்லப்படலாகாது.

10. கொல்களம் எதற்கும் பொறுப்பாளியாயிருப்பவர், தொற்று நோய், ஒட்டு நோய் அல்லது சரும நோய் எதனாலும் வருந்தும் அல்லது சமீப காலத்தில் வருந்திய அல்லது அத்தகைய நோயினால் வருந்தும் எவருடனும் சமீபகாலத்தில் பணிவிடை செய்த எவரையும் நோய் தொற்றும் கால எல்லையும் காத்தற் கால எல்லையும் கழியும்வரை அக்கொல்களத்துக்குள் பிரவேசிக்கவேனும் எம்மிருகத்தையும் கொல்லுவதில் பங்கு கொள்ளவேனும் அனுமதிக்கலாகாது.

11. நியாயமான எல்லா வேளைகளிலும் எந்தக் கொல்களத்துக்கும் செல்வதும் அதனைப் பரிசோதிப்பதும் வைத்திய சௌக்கிய உத்தியோகத்தருக்கு சட்டமுறையாகும். அதற்குப் பொறுப்பாளியாயிருப்பவர் அன்னாருக்குத் தேவையான சகல உதவிகளையும் செய்தல் வேண்டும்.

12. சபையால் தாபிக்கப்பட்ட கொல்களம் எதையும் உபயோகிப்பதற்கு கீழ்காணும் வீதப்படியான ஒரு கட்டணம் சபையிடம் முதலில் செலுத்தப்படவேண்டும். அக்கட்டணம் செலுத்தப்பட்டமைக்குச் சான்றான அலுவலகப் பற்றுச்சீட்டு ஒன்றின்றி எம்மிருகத்தையும் கொல்லலாகாது.

| | ரூ. ச. |
|---|---|
| மாடுகளுக்கு தலைக்கு :— .. .. | 1 0 |
| செம்மறியாடுகளுக்கு அல்லது வெள்ளாடுகளுக்கு தலைக்கு :— .. .. .. | 0 50 |

13. கொல்களக் காப்பாளர் ஒவ்வொருவரும் சபை பணிக்கின்ற விதத்தில், கொல்களத்தில் கொல்லப்படும் மிருகம் ஒவ்வொன்றையும் பற்றிய விபரங்களின் பதிவேடு ஒன்றை வைத்திருக்கவேண்டும்.

14. இந்தப் பிரமாணங்களால் வைத்திய சௌக்கிய உத்தியோகத்தருக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள், வைத்திய சௌக்கிய உத்தியோகத்தரின் பொதுவான அல்லது சிறப்பான ஏவலின்படி செயலாற்றும் உத்தியோகத்தர் எவராலும் பிரயோகிக்கப்படலாம்.

15. இந்தப் பிரமாணங்களில் :—

" தலைவர் " என்பது சபைத் தலைவர் எனப்பொருள்படும்,
" சபை " என்பது யாழ்ப்பாண மாவட்டத்துப் புலோப்பளைக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபை எனப்பொருள்படும்.

3-5—4.3.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,685

---

## கேகாலை நகர சபை வட்டாரங்களின் வரையறை விசாரணைச் சபை

கேகாலை நகர சபை எல்லைக்குள் இப்பொழுதுள்ள வட்டாரங்களைத் திரும்ப வரையறை செய்வதற்கு உள்ளூர் ஆட்சி அமைச்சர் தீர்மானித்துள்ளார். திரும்பவரையறை செய்யப்படும் ஒவ்வொரு வட்டாரத்திலும் சமமான வாக்குக்களைப் பெற்றுக் கொள்வதே இம்முயற்சியின் நோக்கமாகும். எனவே, வழக்கறிஞர் திரு. என். குமாரசிங்கம் அவர்களைப் பின்வரும் விஷயங்களைப் பரிசீலனை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி, நியமித்துள்ளார் :—

(அ) தற்பொழுது, கேகாலை நகரசபை எல்லைக்கு வெளியேயுள்ள பிரதேசத்தைத் தகுந்ததாயின், நகரசபையுடன் சேர்க்கும் விஷயம் ;

(ஆ) நகரசபைப் பிரதேசம், சனத்தொகை, வேறு முக்கிய அம்சங்கள் முதலிய விஷயங்களை ஆதாரமாகக் கொண்டு, நகரசபையில் எத்தனை அங்கத்தவர்கள் இருத்தல் வேண்டுமென நிர்ணயித்தல் ;

(இ) கேகாலை நகரசபை எல்லைகளின் வரையறை ;

(ஈ) திரும்ப நகரசபை வட்டாரங்கள் வரையறை செய்யப்பட்ட பின், கேகாலை நகரசபை எல்லைக்குள் அடங்கிய ஒவ்வொரு வட்டாரத்தின் எல்லைகளையும் வரையறை செய்யும் விஷயம்.

மேற் குறிக்கப்பட்ட விசாரணைச் சபையின் விசாரணை நியதிகட்கு இணங்கவுள்ள எல்லா விஷயங்களிலேனும் அல்லது ஒரு சில விஷயங்களிலேனும் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களையாவது, முறைப்பாடுகளையாவது சமர்ப்பிக்க விரும்பும் தனி நபர்களாவது சபை–தாபனங்களாவது எழுத்தில், 1966 ஆம் ஆண்டு, மார்ச்சு மாதம் 14 ஆம் திகதிக்கு முன், கீழே கையொப்பமிடும் அதிகாரிக்குக் கிடைக்குமாறு, அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

அனுப்பப்படும் முறைப்பாடுகள் தட்டெழுத்தில் பொறிக்கப்பட்டு மூன்று பிரதிகளுடன் அனுப்பப்படுதல் வேண்டும்.

பின்பு குறிக்கப்படுந் திகதிகளில், இவ்விசாரணைச் சபை சம்பந்தப்பட்ட பகிரங்கக் கூட்டங்கள், நடைபெறும்.

ஆல். ஜீ. சிறிவர்த்தன (உ.உ.அ.)
காரியதரிசி,
விசாரணைச் சபை.

உள்ளூர் ஆட்சி இலாகா,
இரத்தினபுரி,
1966 ம் ௵ மார்ச்சு ௴ 2 ந உ.

3–213—4.3.66ந் திகதிய வர்த்தமானி இல. 14,685

# துணைவிதிகள்

ஏல். ஜீ.—ஜீ. 40/18.

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

1961 ம் ஆண்டின் 60 இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட படியான (237ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ம் பிரிவின் கீழ், யாழ்ப்பாண மாவட்டத்து சாவகச்சேரி கிராமப் பிரதேசத்தின் கிராமச்சபையால் ஆக்கப்பட்டு, உள்ளூராட்சி அமைச்சருக்கு அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவால் உரித்தாக்கப்பட்ட அதிகாரபலத்தைக் கொண்டு அவரால் அங்கீகரிக்கப்பட்ட துணை விதிகள்.

எம். திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு, 1966 ம் ௵ ஜனவரி மாதம் 29 ந் வ.

### துணைவிதிகள்

### வாகன மிருகவரி

1. (i) கட்டளைச் சட்டத்தின் 39 ஆம் பிரிவின்கீழ் திரட்டப்படும் வாகன மிருகவரியின் பொருட்டு அவ்வரிக்குப் பாத்திரமான வாகனம் அல்லது மிருகம் எதையும் தமது ஆட்சியிலேனும் கட்டுக்காப்பிலேனும் கட்டுப்பாட்டிலேனும் வைத்திருக்கும் ஒவ்வொருவரும் இதன் " அ " அட்டவணையில் குறித்துள்ளதும் சபைக்கந்தோரில் பெற்றுக்கொள்ளப் படக் கூடியதுமான படிவத்தில் உள்ளபடி ஒரு விபர அட்டவணையை தலைவரிடம் கொடுக்கவேண்டும்.

(ii) கட்டளைச் சட்டத்தின் 39 ம் பிரிவின் கீழ் வரிசெலுத்தப் பாத்திர வாளியானவர், 1965 ம் ஆண்டின் பொருட்டான பந்தி (1) இல் சொல்லப்படும் அட்டவணையை, 1965 நவம்பர் 30க்குப் பிந்தாமல் எழுதி நிரப்பித் தலைவருக்கு அனுப்பவேண்டும். அவர் அந்தவாகனத் தை அல்லது மிருகத்தைத் தனது ஆட்சியில், கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் பிந்திய வருடம் எதன் பொருட்டேனும் அப்படியான அட்டவணையைத்தரும்படி கேட்கப்படலாகாது.

2. கட்டளைச் சட்டத்தில் 39 (2) ம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய துணைவிதி 1 இல் சொல்லப்படும் அட்டவணையைக் கொடுத்த ஒவ்வொரு வரும் வேறு அறிவித்தலின்றி—

(அ) 1965 ம் ஆண்டுக்கு அட்டவணையில் சொல்லப்படும் வாகனங்களுக் கும் மிருகங்களுக்கும், இத்துணைவிதிகள் வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதியிலிருந்து 30 தினங்களுக்குள், வரி கொடுக்கவும் ;

(ஆ) பிந்திய ஆண்டு ஒவ்வொன்றிற்கும், அட்டவணையில் சொல்லப் படும் வாகனங்கள் மிருகங்களில் அவ்வாண்டில் முப்பது நாட்களுக்குமேல் அவரது ஆட்சியில் கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டில் இருப்பனவற்றிற்கு, அவ்வருடத்து மார்ச் மாதம் 31 ம் திகதிக்குப் பிந்தாமல், வரிகொடுக்கவும் பாத்திரராவர்.

3. எவரேனும் துணைவிதி 1 இல் சொல்லப்படும் அட்டவணையைக் கொடுத்தபின்னர் அவ்வட்டவணையில் சொல்லப்படாததும் கட்டளைச் சட்டப்படி வரிக்குப் பாத்திரமானதுமான வாகனம் அல்லது மிருகம் எதையும் வாங்கினால் வைத்திருந்தால் அல்லது உபயோகித்தால் அல்லது துணைவிதியின்படி அட்டவணை எதுவும் கொடுக்காத எவரும் முதன் முறையாக அவ்வரிக்குப் பாத்திரமான வாகனம் அல்லது மிருகம் எதையும் வாங்கினால், வைத்திருந்தால் அல்லது உபயோகித் தால் அந்தவாகனத்தை அல்லது மிருகத்தை அவர் வாங்கிய அல்லது வைத்திருக்கவேனும் உபயோகிக்கவேனும் தொடங்கிய திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் அவ்விதம் வாங்கியதை, வைத்திருப்பதை அல்லது உபயோகிப்பதைக் குறித்து தலைவருக்கு எழுத்தில் ஒரு அறிவித்தல் அனுப்பி இதன் " அ " அட்டவணையில் குறித்துள்ள படிவத்தில் உள்ளபடியான விபர அறிக்கை ஒன்றைக் கொடுக்கவும் வேண்டும்.

4. கட்டளைச் சட்டத்தின் 39 (2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, 3 ம் துணைவிதியில் சொல்லப்படும் எழுத்துமூலமான அறிக்கையைக் கொடுக்கும் ஒவ்வொருவரும் அவ்வறிக்கை எந்த ஆண்டில் கொடுக் கப்படுகின்றதோ அந்த ஆண்டுக்கும் பிந்திய ஒவ்வொரு ஆண்டுக்கும் அந்த அறிக்கையில் குறித்துள்ள, அவருடைய ஆட்சியில், கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டில் இருக்கும், அவ்வாகனங்களுக்கும் மிருகங்களுக்கும் தலைவரால் அதன்பொருட்டு அவருக்கு அறிவிக்கப்படும் காலத்துக்குள் வரி கொடுக்கப்பாத்திரர் ஆவார்.

5. (i) துணைவிதி 1 இல் சொல்லப்படும் அட்டவணையை அல்லது துணைவி 3 இல் சொல்லப்படும் எழுத்துமூலமான அறிக்கையைக் கொடுத்தபின்னர் அந்த அட்டவணையில் அல்லது அந்த அறிக்கையில் பதிந்துள்ள அல்லது சொல்லப்பட்டுள்ள வாகனம் அல்லது மிருகம் எதற்கும் வரிகொடுக்கும் பாத்தியதையில் இருந்து தவிர்த்து விடும்படி கட்டளைச் சட்டத்தின் 39 (3) ம் பிரிவின் கீழ் கேட்கும் ஒவ்வொரு வரும் அவ்விதம் கேட்பதற்கான காரணங்களைக் காட்டி தவிர்த்து விடுதற்கான, அவரது கோரிக்கைபற்றி தலைவருக்கு உடனே எழுத்தில் அறிவிக்க வேண்டும்.

5. (ii) துணைவிதி 1 இல் சொல்லப்படும் அட்டவணையை அல்லது துணைவிதி 3 இல் சொல்லப்படும் எழுத்துமூலமான அறிக்கையைக் கொடுத் தபின் வாகனம் அல்லது மிருகம் எதையாவது வைத்திராது அல்லது உபயோகியாது விடும் ஒவ்வொருவரும் அத்தகைய மிருகத்தை அல்லது வாகனத்தை அவர் வைத்திராது அல்லது உபயோகியாது விட்டுவிட்டா ரென உடனே தலைவருக்கு எழுத்தில் அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

6. எவ்வாகனத்துக்கேனும் எவராலும் வரிகொடுக்கப்பட்டதும் அவ் வாகனத்தின் பொருட்டு, இதன் " ஆ " அட்டவணையில் குறித்துள்ள வாகனங்களைப் பேதப்படுத்திக்காட்டும் எழுத்துகளில் அவ்வாகனத்துக் குரிய எழுத்துகளையும் அது எந்தவருடத்திற்கு வழங்கப்படுகிறதோ அந்த வருடத்தைக் குறிக்கும் இலக்கங்களையும் வாகனங்களின் பதி வேட்டிலுள்ள அவ்வானத்தின் எண்ணையும் கொண்ட உலோகத்தகடு ஒன்றைத் தலைவர் அன்னாருக்கு வழங்கவேண்டும். தகடு எதுவும் உபயோகத்தினால் அல்லது வேறுவிதத்தில் தெளிவாகத் தெரியாது போனால் அதன் சொந்தக்காரர் தலைவரிடம் அதைத் திருப்பிக் கொடுத்து ஐம்பது சதமும் செலுத்தினால் புதியதகடு ஒன்றைப்பெறும் உரித்துள்ளவர் ஆவார். வழங்கப்பட்டதகடு எதுவும் காணமல் போய் விட்டது அல்லது களவுபோய் விட்டது என்றுசத்தியக் கடதாசியிலே னும் வேறு வகையிலேனும் தலைவருக்கு நம்பிக்கை ஏற்படுமாயின் அவர் அதன் சொந்தக்காரர் அறுபது சதம் செலுத்தி விண்ணப் பிப்பாரேல் அன்னாருக்கு ஒரு புதிய தகட்டைக் கொடுக்கலாம்.

7. ஒவ்வொரு வாகனத்தினதும் சொந்தக்காரர் அல்லது பொறுப் பாளி அந்த வாகனத்துக்கு 6 ம் துணை விதியின் கீழ் கொடுக்கப்படும் தகட்டை அந்தவாகனத்தின் துலக்கமான ஒரு பகுதியில் மாட்டிவைக்க வேண்டும்.

8. ஏதேனும் தெரு அல்லது பாதை மார்க்கமாகச் சென்று கொண்டிருக்கும் எந்தவாகனத்தையும் அந்த வாகனத்தில் மாட்டி வைக்கப்பட வேண்டுமெனத் துணைவிதி 7 ஆல் வேண்டப்படும் உலோகத் தகட்டைப் பார்வையிடுதற் பொருட்டு தலைவரேனும் தலைவரால் எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட வேறு உத்தியோகத்தர் எவருமேனும் நிறுத்துவதும் தடுத்துவைப்பதும் சட்டமுறையாகும். அந்த வாகனத் தின் சாரதி அல்லது பொறுப்பாளி தலைவராவது அத்தகைய வேறு உத்தியோகத்தராவது கேட்குங்கால் அந்த வாகனத்தை நிறுத்தி அத்தகட்டைப் பார்வையிடுதற்கு அன்னாரை அனுமதிக்கவேண்டும்.

9. இத்துணை விதிகளில் :—

" தலைவர் " என்பது சபைத்தலைவர் எனப்பொருள்படும் ;

" சபை " என்பது யாழ்ப்பாண மாவட்டத்து சாவகச்சேரி கிராமப் பிர தேசத்தின் கிராமச்சபை எனப் பொருள்படும் ;

" கட்டளைச் சட்டம் " என்பது (257 ம் அத்தியாயமான,) கிராமச்சபைகள் கட்டளைச் சட்டம் எனப் பொருள்படும்.

### அட்டவணை " அ "

### படிவம்

இல :

வட்டார இல :

**சாவகச்சேரி கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபை**

வாகன, மிருகவரி பற்றியதுணை விதிகளின் நியதிப்படி கொடுக்கப்பட வேண்டிய வாகனங்களின் அல்லது மிருகங்களின் அல்லது வாகனங்களினதும் மிருகங்களினதும் விபர அறிக்கை :—

சொந்தக்காரரின் அல்லது ஆட்சிக்காரரின் பெயர் :————.

முகவரி :————.

கிராமம் :————.

| வாகனங்களின் அல்லது மிருகங்களின் அல்லது வாகனங்களினதும் மிருகங்களினதும் விபரங்கள் | வார்த்தை களில் எண்ணிக்கை | குறிப்புகள் துவிச்சக்கர வண்டியாயின் உற்பத் தியாளரின் இலக்கத்தை தருக |
|---|---|---|
| பாரவண்டிகள், பிரயாணவண்டிகள் அல்லது றிக்ஷோக்கள் தவிர்ந்த சகல இன வாகனங்கள் | | |
| சகல இன இரட்டை மாட்டு பாரவண்டிகள் அல்லது பிரயாண வண்டிகள் | | |
| சகல இன ஒற்றை மாட்டுப் பாரவண்டிகள் அல்லது பிரயாண வண்டிகள் | | |
| வாடகைக்கு விடுவதற்கான சகல இன ஒற்றை மாட்டுப் பாரவண்டிகள் அல்லது பிரயாண வண்டிகள் | | |
| றிக்ஷோக்கள் | | |
| கைவண்டிகள் | | |
| துவிச்சக்கர வண்டிகள் | | |
| யானைகள் | | |
| குதிரைகள் | | |
| கோவேறு கழுதைகள் | | |

நான் அறிந்தவரை, மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சகல வகையிலும் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் நான் உறுதிப் படுத்துகின்றேன்.

---

சொந்தக்காரரின் அல்லது ஆட்சிக்காரரின் கையொப்பம்.

அட்டவணை " ஆ "

மாட்டுவண்டி, பிரயாண வண்டி அல்லது றிக்ஷோ தவிர்ந்த சகல இனவாகனம் ஒவ்வொன்றிற்கும்.—சா. கி. ச. வா. இ.

சகல இன இரட்டை மாட்டுப் பாரவண்டி அல்லது பிரயாணவண்டி ஒவ்வொன்றுக்கும் : சா. கி. ச. இ.

ஒற்றைமாட்டுப் பாரவண்டி அல்லது பிரயாண வண்டி ஒவ்வொன்றுக்கும்: சா. கி. ச. ஒ.

வாடகைக்கு விடுவதற்கான ஒற்றை மாட்டுப் பாரவண்டி அல்லது பிரயாணவண்டி ஒவ்வொன்றுக்கும்: சா. கி. ச. ஒ. வா.

துவிச் சக்கரவண்டி ஒவ்வொன்றுக்கும்: சா. கி. ச. து.

3-4—4.3.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,685

---

# நானாவிதம்

## 1952 ம் ஆண்டின் 6 ம் இலக்க தலதாபனங்கள் (நிலையான உப விதிகள்) பற்றிய சட்டங்கள்

1952 ம் ஆண்டின் 6 ம் இலக்க தலதாபனங்கள் (நிலையான உப-விதிகள்) பற்றிய சட்டத்தின் 3 ம் பிரிவின்படி யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கிலுள்ள முகமாலைகிராமப் பகுதியின் கிராமச் சபையால் நிறைவேற்றப்பட்ட கீழ்காணும் தீர்மானம் அப்பிரிவின் தாற்பரியப்படி பிரசித்தப்படுத்தப்படுகின்றது.

### தீர்மானம்

தலதாபன மந்திரியால் ஆக்கப்பட்டு "செனற்" சபையாலும் ஜனப்பிரதிநிதிகள் சபையாலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் அங்கீகரிக்கப் பட்டதென 1965 ம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ம் திகதி வெளியான 14,287 ம் இலக்க " கசெற் "றில் அறிவிக்கப்பட்ட நிலையான உப-விதியான XXXVIII ம் பாகத்தை இத்தீர்மானம் " கசெற் " றில் பிரசித்தப்படுத்தப் படும் திகதியிலிருந்து ஏற்றுக்கொள்வதென்று முகமாலை கிராமச் சபை 1952 ம் ஆண்டின் 6 ம் இலக்க தலதாபனங்கள் (நிலையான உப-விதிகள்) பற்றிய சட்டத்தின் 3 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின்படி இத்தால் தீர்மானிக்கிறது.

ச. சின்னத்துரை,
தலைவர்,
முகமாலை கிராமசபை.

கி.ச. காரியாலயம்,
முகமாலை,
பளை, 1965 ம் ஆண்டு யூலை மீ 9 ந் உ.

3-3—4.3.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,685

**அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய கிரய விகிதங்கள்**

## " இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்) "

*வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது*

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு,** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் மற்றும் நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணிவரையும் காரியாலய நேரமாகும்.

4. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் நண்பகல் 12 மணிக்கும், மற்றும் நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக ரைப்** அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறெக்ரறல் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. .. | .15 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி .. .. | 15 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. .. | 165 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. .. | 330 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம்** அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 1.8.63 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| **அரசாங்க வர்த்தமானி (வருடத்திற்கு)** | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 27 50 | 40 50 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. | 17 50 | 23 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. .. | 25 0 | 33 0 |

**ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.**

| **தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்** | விலை சதம் | தபாற் செலவு (உள்ளூர்) சதம் |
|---|---|---|
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 30 | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 60 | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. .. | 15 | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குப் பின் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. .. | 30 | 15 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை, அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி 500, கொழும்பு, என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

**இலங்கை அரசாங்க வர்த்தமானி** சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் **வர்த்தமானி** வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாக சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.**

அட்டவணை 1966

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசி திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| **மார்ச்சு** .. | 4. 3.66 | வெள்ளி .. | 25. 2.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 11. 3.66 | வெள்ளி .. | 4. 3.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 18. 3.66 | வெள்ளி .. | 11. 3.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 25. 3.66 | வெள்ளி .. | 17. 3.66 | வியாழன் | பி.ப. | 3.30 |
| **ஏப்பிறல்** .. | 1. 4.66 | வெள்ளி .. | 25. 3.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 7. 4.66 | வியாழன் .. | 31. 3.66 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 15. 4.66 | வெள்ளி .. | 1. 4.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 22. 4.66 | வெள்ளி .. | 15. 4.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 29. 4.66 | வெள்ளி .. | 22. 4.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| **மே** .. | 6. 5.66 | வெள்ளி .. | 26. 4.66 | செவ்வாய் | நண்பகல் | 12 |
| | 13. 5.66 | வெள்ளி .. | 6. 5.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 20. 5.66 | வெள்ளி .. | 13. 5.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 27. 5.66 | வெள்ளி .. | 20. 5.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| **யூன்** .. | 3. 6.66 | வெள்ளி .. | 25. 5.66 | புதன் | நண்பகல் | 12 |
| | 9. 6.66 | வியாழன் .. | 1. 6.66 | புதன் | நண்பகல் | 12 |
| | 16. 6.66 | வியாழன் .. | 9. 6.66 | வியாழன் | நண்பகல் | 12 |
| | 24. 6.66 | வெள்ளி .. | 16. 6.66 | வியாழன் | நண்பகல் | 12 |
| **யூலை** .. | 1. 7.66 | வெள்ளி .. | 24. 6.66 | வெள்ளி | நண்பகல் | 12 |
| | 8. 7.66 | வெள்ளி .. | 1. 7.66 | வெள்ளி | நண்பகல் | 12 |
| | 15. 7.66 | வெள்ளி .. | 8. 7.66 | வெள்ளி | நண்பகல் | 12 |
| | 22. 7.66 | வெள்ளி .. | 14. 7.66 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 29. 7.66 | வெள்ளி .. | 22. 7.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| **ஓகத்து** .. | 5. 8.66 | வெள்ளி .. | 29. 7.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 12. 8.66 | வெள்ளி .. | 5. 8.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 19. 8.66 | வெள்ளி .. | 12. 8.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 26. 8.66 | வெள்ளி .. | 19. 8.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| **செத்தெம்பர்** .. | 2. 9.66 | வெள்ளி .. | 26. 8.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 9. 9.66 | வெள்ளி .. | 2. 9.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 16. 9.66 | வெள்ளி .. | 9. 9.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 23. 9.66 | வெள்ளி .. | 16. 9.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 30. 9.66 | வெள்ளி .. | 23. 9.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| **ஒக்ரோபர்** .. | 7.10.66 | வெள்ளி .. | 30. 9.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 14.10.66 | வெள்ளி .. | 7.10.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 20.10.66 | வியாழன் .. | 14.10.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 27.10.66 | வியாழன் .. | 20.10.66 | வியாழன் | நண்பகல் | 12 |
| **நவெம்பர்** .. | 3.11.66 | வியாழன் .. | 27.10.66 | வியாழன் | நண்பகல் | 12 |
| | 10.11.66 | வியாழன் .. | 3.11.66 | வியாழன் | நண்பகல் | 12 |
| | 18.11.66 | வெள்ளி .. | 10.11.66 | வியாழன் | நண்பகல் | 12 |
| | 25.11.66 | வெள்ளி .. | 18.11.66 | வெள்ளி | நண்பகல் | 12 |
| **திசெம்பர்** .. | 2.12.66 | வெள்ளி .. | 24.11.66 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 9.12.66 | வெள்ளி .. | 2.12.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 16.12.66 | வெள்ளி .. | 8.12.66 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 23.12.66 | வெள்ளி .. | 16.12.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 30.12.66 | வெள்ளி .. | 22.12.66 | வியாழன் | பி.ப. | 3.30 |

அரசாங்க அச்சகம், கொழும்பு,
1966 ம் ஆடு பெப்பருவரி மீ 11 ந் உ.

**பேர்னட் த சில்வா,**
அரசாங்க அழுத்தகன்.

இலங்கைக், வாழைச்சேனை எம்பேர்ண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.